# செய்தி வெளியீடு – 20.10.2010

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் முதலமைச்சர் கலைஞர் தலைமையில்; குடியரசுத் தலைவரின் செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான தேர்வுக்குழுக் கூட்டம் – ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் நடவடிக்கைகள்

2008–2009ஆம் ஆண்டிற்குரிய குடியரசுத் தலைவரின் செம்மொழித் தமிழ் விருதுகளான "தொல்காப்பியர் விருது", "குறள் பீட விருது", "இளந்தமிழ் அறிஞர் விருது" ஆகியவற்றிற்குரிய தேர்வுக்குழுக் கூட்டம், 20.10.2010 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள "பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலக அரங்கில்" செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தேர்வுக்குழு உறுப்பினர்களாகிய பேராசிரியர் மா.நன்னன், ஞானபீட விருதாளர் திரு.ஜெயகாந்தன், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை உயர்கல்விப் பிரிவு இணைச் செயலாளர் டாக்டர் அனிதா பட்நாகர்ஜெயின் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்குழுவினர் விரிவாகக் கலந்தாய்வு செய்து "தொல்காப்பியர் விருது", "குறள்பீட விருது", "இளம் தமிழ் அறிஞர் விருது" ஆகிய விருதுகளுக்கான அறிஞர்களின் பெயர்களைத் தேர்வு செய்தனர். இப்பெயர்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகப் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆட்சி மன்றக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை உயர்கல்விப் பிரிவு இணைச் செயலாளர் டாக்டர் அனிதா பட்நாகர்ஜெயின், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை நிதி ஆலோசகர் திரு.நவீன்சோய், முனைவர் ஐராவதம் மகாதேவன், பேராசிரியர் முனைவர் ஏ.ஏ.மணவாளன், பேராசிரியர் முனைவர் எஸ்.என்.கந்தசாமி, பேராசிரியர் கே.நாச்சிமுத்து, பேராசிரியர் முனைவர் இராதா செல்லப்பன், தமிழ்வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. இரா. சிவகுமார், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் கரு.அழ. குணசேகரன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கூ.வ.எழிலரசு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநரும் உறுப்பினர் செயலருமான பேராசிரியர் எஸ். மோகன், பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிக் கலந்தாலோசனை செய்யப்பட்டது. புனித ஜார்ஜ் கோட்டையில், முன்னர் சட்டப் பேரவை செயல்பட்டு வந்த மன்றத்தில், தற்போது இயங்கி வரும் "செம்மொழித் தமிழாய்வு நூலகத்திற்கு, "பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம்" எனப் பெயர் சூட்டுவதென்ற தமிழக அரசின் தீர்மானத்தை ஆட்சி மன்றக் குழு ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

மாண்புமிகு முதலமைச்சர் தமது சிறப்புரையில், வெளிநாட்டிலிருந்து ஆய்வாளர்கள் இங்கு வந்து செம்மொழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும்; தமிழகத்திலுள்ள ஆய்வாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று செம்மொழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும்; தேவைப்படும் உதவிகளை மத்திய அரசு செய்து தரவேண்டும் என்னும் தமது விருப்பத்தை வேண்டுகோளாக முன்வைத்தார். மத்திய அரசு சார்பில்

கலந்துகொண்ட மனிதவள மேம்பாட்டுத் துறை இணைச் செயலாளர், இந்த வேண்டுகோளை மத்திய அரசு பரிவுடன் கவனித்து, ஆவன செய்யுமென்றும்; இச்செம்மொழி நிறுவனத்தின் திட்டப்பணிகள் எல்லாவற்றிற்கும் மத்திய அரசு முழு ஒத்துழைப்பு நல்கும் என்றும் உறுதி கூறினார்.

தற்போது சென்னை காமராஜர் சாலையிலுள்ள பாலாறு இல்லத்தில் இயங்கி வரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றப்பட்டதும், பாலாறு இல்லத்தை மீண்டும் பொதுப் பணித் துறையிடமே ஒப்படைத்து விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கிவரும் "பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகமும்" அதனைச் சுற்றியுள்ள செம்மொழித் தமிழாய்வு நிறுவனப் பயன்பாட்டிற்குரிய வளாகமும் ஆண்டொன்றுக்குப் பெயரளவு குத்தகைத் தொகையாக பத்து ரூபாய்க்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலும், இந்நிறுவனம் தமிழகத்தோடு மட்டும் அமைந்துவிடாமல், உலகளாவிய நிலையில் உயர்ந்தோங்கித் தமிழ்ப் பண்பாடு, கலை, இலக்கியம் முதலியவற்றைக் கொண்டு செல்லும் பெரும் உயராய்வு மையமாகச் சிறப்புறச் செயலாற்றும் எனவும் கூறினார்.

தொடக்கத்தில், நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் மோகன் வரவேற்புரையாற்றிட, பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க.இராமசாமி, நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றி விளக்கினார்.

..............................................................

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9